# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

சுற்றறிக்கை எண்:57 தேதி:-20.08.2015

# கோவை விரிவடைந்த தமிழ் மாநில செயற்குழு முடிவுகள்

அன்பார்ந்த தோழர்களே,

BSNL ஊழியர் சங்கத்தின் விரிவடைந்த மாநில செயற்குழு கோவை, நல்லாயன் திருக்குடும்ப சமுதாயக் கூடத்தில் நமது அகில இந்திய உதவி பொது செயலாளரும், தமிழ் மாநில தலைவருமான தோழர் S.செல்லப்பா அவர்களின் தலமையில் 14.08.2015 அன்று சிறப்பாக நடைபெற்றது. தமிழ் மாநில சங்க நிர்வாகிகள், மாவட்ட செயலாளர்கள் மற்றும் கிளை செயலாளர்கள் என தமிழகம் முழுவதும் இருந்து வந்திருந்த 250க்கும் மேற்பட்ட தோழர்களின் பங்கேற்புடன் நடைபெற்ற இந்த விரிவடைந்த மாநில செயற்குழு கூட்டத்தின் துவக்கத்தில் நமது தேசியக் கொடியை மாநில துணைத்தலைவர் தோழர் K.மாரிமுத்து அவர்களும், நமது சங்கக் கொடியினை இந்த மாதம் பணி ஓய்வு பெற உள்ள கோவை மாவட்ட BSNL ஊழியர் சங்க தலைவர் தோழர் K.சந்திரசேகரன் அவர்களும் விண்ணதிரும் கோஷத்திற்கும் இடையே ஏற்றி வைத்தனர்.

தமிழ் மாநில உதவித் தலைவர் தோழர் V.வெங்கட்ராமன் அவர்கள் அஞ்சலி உரை நிகழ்த்திய பின் விரிவடைந்த மாநில செயற்குழு நமது குடியரசு தலைவர் திரு அப்துல் கலாம், குஜராத் மாநில செயலாளர் தோழர் A.M.பட்டீல், நமது சங்கத்தின் மூத்த தலைவர்களில் ஒருவரான தோழர் P.முருகேசன் உள்ளிட்ட தலைவர்களின் மறைவிற்கு ஒரு நிமிடம் அஞ்சலி செலுத்தியது. BSNL ஊழியர் சங்கத்தின் மாநில உதவி செயலாளர் தோழர் P.இந்திரா இந்த விரிவடைந்த மாநில செயற்குழுவில் பங்கேற்ற அனைவரையும் வரவேற்று பேசினார். நமது மாநில தலைவர் தோழர் S.செல்லப்பா அவர்கள் தலைமையுரை நிகழ்த்திய பின் மாநில செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன் அவர்கள் விரிவடைந்த மாநில செயற்குழுவிற்கான அறிக்கையினை அறிமுகப்படுத்தி உரையாற்றினார்.

பின்னர் நமது விரிவடைந்த மாநில செயற்குழுவினை துவக்கி வைத்து நமது அகில இந்திய பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் உரையாற்றினார். அவர் தனது உரையில் மத்திய அரசின் தவறான பொருளாதார கொள்கைகளால் பொதுத்துறை நிறுவனங்கள், குறிப்பாக BSNL பாதிக்கப்படுவதை விரிவாக எடுத்துரைத்ததுடன் மத்திய அரசு தற்போது அறிவித்துள்ள துணை டவர் நிறுவனத்தால் ஏற்பட போகும் ஆபத்துகள் தொடர்பாகவும் விளக்கினார். மேலும் BSNL நிறுவனத்தை பாதுகாக்க நமது செயல்பாடுகளை விரிவு படுத்துவது தொடர்பாகவும், ஊழியர்களின் பிரச்சனைகள், அதில் நமது சங்கத்தின் நிலைபாடுகள் ஆகியவற்றை விரிவாக எடுத்துரைத்தார்.

அவரது துவக்கவுரைக்கு பின் அனைத்து மாவட்டங்கள் சார்பாகவும் பங்கேற்ற சார்பாளர்கள் விவாதத்தில் பங்கேற்றனர். அவர்களது விவாதத்திற்கு பின் கீழ்கண்ட முடிவுகள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

01) ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரங்களை பாதுகாக்க வேண்டும், பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்பனை செய்யக்கூடாது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி மத்திய தொழிற்சங்கங்கள் விடுத்துள்ள செப்டம்பர் 2 அகில இந்திய பொது வேலை நிறுத்தத்தை தமிழகத்தில் 100 சதவிகிதம் வெற்றிகரமாக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என விரிவடைந்த தமிழ் மாநில செயற்குழு அறைகூவல் விட்டுள்ளது.

02) அகில இந்திய FORUM விடுத்த அறைகூவலான BSNLஐ பாதுகாக்க ஒரு மாத கால இயக்கத்தை தமிழ் மாநிலத்தில் சிறப்பாக நடத்திய மாவட்ட சங்கங்களை இந்த விரிவடைந்த மாநில செயற்குழு பாராட்டியதோடு, இதனை தொடர்ச்சியாக கொண்டு செல்ல வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டது. மேலும் தரைவழி தொலைபேசிகளுக்கான புதிய இணைப்புகள் வரும் சமயத்தில் NON-FEASIBIITY என்று மறுக்காமல் அவர்களுக்கு இணைப்பு கொடுப்பதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொண்டது. அதற்கு தேவையான கேபிள்கள் உள்ளிட்ட கருவிகள் பற்றாக்குறை இருந்தது என்றால் மாநில சங்கத்திற்கு தெரிவிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டது.

03) ஒரு குறுகிய காலத்தில் விரிவடைந்த தமிழ் மாநில செயற்குழுவை ஏற்று பெரும்பாலான செலவுகளை செய்த கோவை மாவட்ட சங்கத்திற்கு விரிவடைந்த தமிழ் மாநில செயற்குழு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

04) நமது அகில இந்திய சங்கத்தின் அறைகூவலின் அடிப்படையில், ரயில்வே துறையை தனியார்மயமாக்கும் முயற்சிக்கு எதிராக தமிழகம் முழுவதும் 30.06.2015 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றதற்கு விரிவடைந்த மாநில செயற்குழு பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறது.

05) 05.08.2015 அன்று நடைபெற்ற மத்திய அமைச்சரவை கூட்டத்தில் BSNLல் இருந்து 65000 டவர்களை பிரித்து துணை டவர் நிறுவனம் அமைப்பதை எதிர்த்து அகில இந்திய FORUM விடுத்த அறைகூவலை ஏற்று தமிழகத்தின் அனைத்து கிளைகளிலும் 12.08.2015 ஆர்ப்பாட்டத்தை வெற்றிகரமாக்கிய அனைத்து கிளைகளுக்கும் தமிழ் மாநில செயற்குழு பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

06) 02.06.2013 அன்று நடைபெற்ற JTO LICE தேர்வில் காலிப்பணியிடங்களில் ஏற்பட்டிருந்த குளறுபடிகளை நீக்கவும், அதன் முடிவுகளை வெளிக் கொணரவும் தமிழ் மாநில சங்கம் கடும் முயற்சியை மேற்கொண்டது. அதற்காக கார்ப்பரேட் அலுவலகத்தில் நமது மத்திய சங்கம் கடுமையாக வாதிட்டு இன்று மிகப்பெரிய வெற்றியை பெற்றுக் கொடுத்துள்ளது. அதற்காக மத்திய சங்கத்தை தமிழ் மாநில சங்கம் வாழ்த்துகிறது. இந்த தேர்வில் வெற்றி பெற்ற தோழர்களுக்கும் தமிழ் மாநில விரிவடைந்த செயற்குழு வாழ்த்துகிறது.

07) சென்னை கூட்டுறவு சங்கத்தில் சாதாரணக் கடனுக்கான வட்டியை 01.06.2015 முதல் 1.5% உயர்த்தியதை கண்டித்து, திரும்ப பெற வேண்டும் என வலியுறுத்தி தமிழகம் முழுவதும் இருந்து 4000க்கும் மேற்பட்ட கையெழுத்துக்கள் பெற்றதற்கு தமிழ் மாநில விரிவடைந்த செயற்குழு பாராட்டியது. மேலும் இந்த வட்டிக் குறைப்பு மற்றும் கூட்டுறவு சங்கத்திற்கு சொந்தமான நிலத்தை உறுப்பினர்களுக்கே பிரித்து தர வேண்டும் எனவும் வலியுறுத்தி செப்டம்பர் 15ஆம் தேதி அனைத்து கிளைகளிலும் ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டும் என விரிவடைந்த மாநில செயற்குழு அறைகூவல் விட்டுள்ளது.

08) BSNL ஊழியர் சங்கத்தின் அடுத்த அகில இந்திய மாநாட்டை தமிழகத்தில் நடத்த வேண்டும் என்ற மத்திய செயற்குழுவின் முடிவை தமிழ் மாநில விரிவடைந்த செயற்குழு ஏகமனதாக ஏற்றுக் கொண்டு, அந்த அகில இந்திய மாநாட்டை கோவையில் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

09) தொலை தொடர்பு தோழன் பத்திரிக்கையின் ஆசிரியர் மற்றும் வெளியிடுபவராக தோழர் S.செல்லப்பா அவர்களையும், அச்சிடுபவராக S.K.PRINITERSஐயும் விரிவடைந்த தமிழ் மாநில செயற்குழு ஏமனதாக ஏற்றுக் கொண்டது.

10) நாகர்கோவிலில் அக்டோபர் 3 மற்றும் 4ஆம் தேதி நடைபெற உள்ள ஒப்பந்த ஊழியர்களின் அகில இந்திய மாநாட்டை வெற்றிகரமாக நடைபெற அனைத்து விதத்திலும் BSNL ஊழியர் சங்கம் ஒத்துழைக்க வேண்டும் என்று விரிவடைந்த மாநில செயற்குழு முடிவெடுத்துள்ளது.

இந்த அனைத்து முடிவுகளையும் மிகச் சிறப்பாக தமிழகத்தில் அமுலாக்கிடுவோம். வெற்றி பெறுவோம்.

வாழ்த்துக்களுடன்,

**தோழமையுள்ள,**

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**